அனைத்துலகத் தமிழ்க் கல்வி பண்பாடு அறிவியல் மேம்பாட்டு இணையம்
International Tamil Education Cultural Scientific Development Federation

# அரையாண்டுத்தேர்வு 2015-2016
# தமிழ்மொழி

பெயர்:- ________________________________

ஆண்டு 7

150 நிமிடங்கள்

கீழேயுள்ள அறிவித்தல்களை முதலில் வாசிக்கவும்!

- ☐ எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்!
- ☐ விடைத்தாள்கள் ஒவ்வொன்றிலும் உங்கள் பெயரை எழுதவும்!
- ☐ பல்தேர்வு வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, கூட்டுக்குள் புள்ளடி இடவும்!
- ☐ பகுதி 2 இற்குரிய விடைகளை நீல அல்லது கறுப்பு நிறப் பேனாவால் எழுதவும்!
- ☐ வினாக்களுக்கு விடையளிக்கும் போது வினாக்குரிய எண்ணை விடைத்தாளில் எழுதவும்!
- ☐ itec நிறுவனத்தின் முத்திரையிடப்பட்ட தாள்களில் மட்டுமே விடையளிக்கவும்!
- ☐ ஒவ்வொரு வினா அல்லது வினாப்பகுதியின் இறுதியில் விடைகளுக்குரிய புள்ளிகள் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளது.
- ☐ வினாத்தாள், விடைத்தாள்கள் எல்லாவற்றையும் ஒன்றாக்கித் தேர்வு மேற்பார்வையாளரிடம் கையளிக்கவும்!

## பகுதி 1

தரப்பட்டுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, அதற்குரிய கூட்டுக்குள் புள்ளடி இடுக!

1. உயிர்களைத் தன்பால் ஈர்த்து இசைய வைப்பது
   அ) பணம் ஆ) பொருள் இ) இசை ஈ) அழகு
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

2. போர்த்துக்கேயருக்கு எதிராகப் போராடிய வன்னிமன்னன்
   அ) பண்டாரவன்னியன் ஆ) கயிலைவன்னியன்
   இ) சங்கிலியன் ஈ) எல்லாளன்
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

3. கருத்து முடியாமல் ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வருவது
   அ) சொல்லியம் ஆ) சொற்றொடர் இ) வினைச்சொல் ஈ) பெயர்ச்சொல்
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

4. மலர்கள் கமகம என மணம் வீசின - கமகம என்பது
   அ) வினைச்சொல் ஆ) எழுவாய் இ) இரட்டைக்கிளவி ஈ) அடுக்குத்தொடர்
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

5. அழுக்காறு என்ற சொல்லின் பொருள்
   அ) பொறுமை ஆ) பொறாமை இ) பெருமை ஈ) வறுமை
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

6. எல்லாச் செல்வங்களும் உடையவர்கள்
   அ) செல்வந்தர் ஆ) அறிவில்லாதவர் இ) அறிவுடையவர் ஈ) வணிகர்
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

7. ஓர் எழுவாய் ஒரு பயனிலையைப் பெற்று வருவது
   அ) தொடர்வாக்கியம் ஆ) சொற்றொடர் இ) வாக்கியம் ஈ) தனிவாக்கியம்
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

8. சிறு துரும்பும் பல் குத்த
அ) உதவாது ஆ) உதவும் இ) உதவவில்லை ஈ) உதவி செய்யவில்லை
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

9. பங்கப் பழனத்து உழும் உழவர் - பழனம் என்ற சொல்லின் பொருள்
அ) காடு ஆ) தோட்டம் இ) வயல் ஈ) வீடு
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

10. மலர்கள் கொத்துக் கொத்தாய் மலர்ந்திருந்தன – கொத்துக் கொத்தாய் என்பது
அ) இரட்டைக்கிளவி ஆ) நொடி இ) அடுக்குத்தொடர் ஈ) பழமொழி
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

11. மோசிகீரனாரின் தலையைக் காத்தது
அ) சிரிப்பு ஆ) அழகு இ) வறுமை ஈ) தமிழ்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

12. யாருக்குச் செய்த உதவி கல்மேல் எழுத்து போல் நிலையானது?
அ) வறியோருக்கு ஆ) செல்வந்தருக்கு இ) அன்பில்லாதோருக்கு
ஈ) நல்லவர்களுக்கு
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

13. தென்றல் காற்று மெல்லென வீசியது - இதில் வந்துள்ள பயனிலை அடைமொழி
அ) தென்றல் ஆ) வீசியது இ) மெல்லென ஈ) காற்று
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

14. ஒருவருக்குப் பகையாக அமைவதென திருக்குறள் சொல்வது
அ) எதிரியை ஆ) சினத்தை இ) அழகை ஈ) அறிவை
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

15. அரசனைக் காட்டிலும் மேலானவன் என மூதுரை சொல்வது
அ) கல்லாதவனை ஆ) கள்வனை இ) கடன்காரனை ஈ) கற்றவனை
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

16. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு - இப்பழமொழியின் பொருள்
அ) வேற்றுமை ஆ) உண்மை இ) ஒற்றுமை ஈ) மென்மை
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

17. ஆத்திசூடி என்ற நூலை எழுதியவர்
அ) திருவள்ளுவர் ஆ) இளங்கோவடிகள் இ) ஔவையார் ஈ) பாரதியார்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

18. தமிழிசையைப் பற்றித் தெளிவாகக் கூறும் நூல்
அ) புறநானூறு ஆ) சிலப்பதிகாரம் இ) ஆத்திசூடி ஈ) திருக்குறள்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

19. இல், இன் இவை
அ) 2ம் வேற்றுமை உருபு ஆ) 4ம் வேற்றுமை உருபு இ) 5ம் வேற்றுமை உருபு
ஈ) 7ம் வேற்றுமை உருபு
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

20. நீ உன் பாடங்களைப் படி! - இவ்வாக்கியம்
அ) கூற்று ஆ) ஏவல் இ) வினா ஈ) மெய்ப்பாடு
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

21. வாக்கிய உறுப்புகளுள் ஒன்று
அ) பெயர் ஆ) அடைமொழி இ) வினை ஈ) தன்மை
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

22. தோற்கருவிகளுள் ஒன்று
அ) வீணை ஆ) புல்லாங்குழல் இ) முரசு ஈ) வயலின்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

23. சிற்பம், ஓவியம், நடனம், நாடகம், இசை - இவற்றின் சிறப்புப் பெயர்
அ) வன்கலைகள் ஆ) புண்கலைகள் இ) நுண்கலைகள் ஈ) நன்கலைகள்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

24. புல் + தரை - இச்சொல்லைச் சேர்த்து எழுதினால்
அ) புல்தரை ஆ) புற்றரை இ) புள்தரை ஈ) புல்த்தரை
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

25. அடங்காப்பற்று எனச் சிறப்பாக அழைக்கப்பட்ட இடம்
அ) பூநகரி ஆ) கந்தரோடை இ) வன்னி ஈ) யாழ்ப்பாணம்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

(25 புள்ளிகள்)

## பகுதி 2

1) கீழேயுள்ள உரைப்பகுதியைப் படித்து, அதன் உள்ளடக்கத்தை வாழிட மொழியில் எழுதுக!

உடல்நலம் என்பது நமது முக்கியத் தேவையாகும். இதற்காக சரிவிகித உணவை உட்கொள்ள வேண்டும்; விளையாட வேண்டும்; உடற்பயிற்சி செய்யவேண்டும்; நோய்கள் வராமல் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இதேபோல், எல்லோருடனும் பழகுவதும் இன்றியமையாத ஒன்றாகும். நம் இன்பதுன்பங்களை நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வது நமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

ஒவ்வொரு தனி மனிதனுடைய தேவைகளைப்போல் நம் குடும்பத்தில் உள்ளவர்களுக்கும் தேவைகள் உள்ளன. பெற்றோர்கள், குடும்பத்திலுள்ள அனைவரினதும் தேவைக்காக உழைக்கின்றார்கள். வீட்டிலும் சமையல், துணிதுவைப்பது, துப்புரவு செய்தல், பாத்திரம் கழுவுதல் இப்படிப் பல வேலைகளைச் செய்கின்றார்கள். வீட்டு வேலைகளில் பெற்றோருக்கு உதவுவது பிள்ளைகளின் கடமையாகும். இதனால் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி உண்டாகின்றது.

(10 புள்ளிகள்)

2) கீழே தரப்பட்டுள்ள ஆங்கில மொழியிலுள்ள பந்தியைத் தமிழில் மாற்றி எழுதுக!

It was a nice sunny day, so I went out into the garden. I heard the children in the playground. They were very loud but happy. At lunch time I went back inside and made lunch for my children. After that I phoned my friend Selvi and invited her round for coffee. I had lunch at one o'clock with my children.
Selvi arrived at three o'clock and we had a nice time. She went home again at five o'clock. My daughter Mahilini, helped me to tidy up the house. Then we played a game. Now it was six o'clock and time for tea. We had bread for tea and a glass of juice. We watched a film together on TV. We were very happy.

(10 புள்ளிகள்)

3) கீழேயுள்ள உரைப்பகுதியைப் படித்து, தரப்பட்டிருக்கும் வினாக்களுக்கு முழுவிடை எழுதுக!

சூழ்நிலை மண்டலம் என்பது மக்கள், விலங்குகள் மற்றும் தாவரங்கள் ஆகியவை ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்ளும் இடமாகும். வாழ்விடம் என்பது ஒரு தாவரம் அல்லது விலங்கு வாழ்வதற்கு இயற்கையாக அல்லது மனிதர்களால் அமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் அமைப்பாகும். சூழ்நிலை மண்டலத்தில் உயிருள்ள மற்றும் உயிரற்ற அனைத்திற்கும் இடமுண்டு. மக்கள், விலங்குகள் மற்றும் தாவரங்கள் ஒன்றுக்கொன்று சார்ந்தே உயிர்வாழ்கின்றன. இவ்வுலகில் ஒவ்வொரு உயிருக்கும் ஒரு முக்கிய பங்குண்டு.

மான் போன்ற தாவர உண்ணிகள் தாவரங்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகின்றன. சிங்கம் போன்ற மாமிச உண்ணிகள், மான் போன்ற விலங்குகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துகின்றன. எலிகள் மனிதர்கள் உண்ணும் உணவுப் பொருட்களை அதிகளவில் சேதப்படுத்துகின்றன. பாம்புகள் எலிகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

தாவரங்களினால் உணவு கிடைக்கின்றது. மரங்கள் நீரை தன் வேருக்குள் பாதுகாக்கின்றன. அத்துடன் அவை காற்று மாசுபடுவதையும் தடுக்கின்றன. மேலும் கார்பன் டை ஒட்சைட்டை உள்ளிழுத்து ஒட்சிசனை வெளியிடுகின்றன. இது உயிர்கள் வாழப் பெரிதும் உதவுகின்றது. மேலும் இவை பறவைகள், விலங்குகள் மற்றும் பூச்சிகளுக்கு வாழ்விடமாகவும் உள்ளன. மற்ற விலங்குகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்து மறைத்துக் கொள்ள தாவரங்கள் உதவுகின்றன. எனவே தாவரங்கள் இல்லாமல் மனிதன் உயிர் வாழ முடியாது. நாம் தாவரங்கள், விலங்குகள், பறவைகள் மற்றும் பூச்சிகளின் இயற்கை வாழ்விடங்களான காடுகளைப் பாதுகாக்க வேண்டும்.

பூமியில் வாழும் அனைத்து உயிரினங்களின் வாழ்க்கையும் சிலந்தியின் வலையைப் போன்று ஒன்றோடொன்று சார்ந்துள்ளது. அதனால்தான் அதை வாழ்க்கைச் சங்கிலி என்று அழைக்கின்றோம். விலங்குகளை, பறவைகளை அதன் கூட்டத்திலிருந்தும் இயற்கை வாழ்விடத்திலிருந்தும் பிரித்துக் கூண்டுக்குள் அடைத்து வைப்பது மிகவும் கொடுமையான செயலாகும்.

1. வாழ்விடம் என்றால் என்ன?

______________________________________________

______________________________________________

______________________________________________

2. உலகிலுள்ள அனைத்து உயிர்களும் எதிலிருந்து உணவைப் பெறுகின்றன?

______________________________________________

______________________________________________

______________________________________________

3. தாவரங்களினால் விலங்குகள் அடையும் நன்மைகள் இரண்டு தருக!

______________________________________________

______________________________________________

______________________________________________

4. வாழ்க்கைச் சங்கிலி என்றால் என்ன?

______________________________________________

______________________________________________

______________________________________________

5. விலங்குகள், பறவைகளை ஏன் கூண்டுக்குள் அடைத்து வைக்கக் கூடாது?

______________________________________________

______________________________________________

______________________________________________

(15 புள்ளிகள்)

4) பின்வரும் பாடலைப் படித்துத் தரப்பட்டிருக்கும் வினாக்களுக்கு விடை தருக!

வாழ்வு

அச்சம் தவிர்ந்தது வாழ்வு - நல்
அன்பில் விளைவது வாழ்வு
மச்சினில் வாழ்பவ ரேனும் - அவர்
மானத்தில் வாழ்வது வாழ்வு!
உச்சி மலை விளக்காக - உல
கோங்கும் புகழ்கொண்ட தான
பச்சைப் பசுந்தமிழ் நாட்டில் - தமிழ்
பாய்ந்திட வாழ்வது வாழ்வு!

மச்சினில் - மாடியில்

1. வாழ்வு எதைத் தவிர்ந்தாக இருக்க வேண்டும்?

______________________________

______________________________

______________________________

2. எதனால் வாழ்வைப் பெறலாம்?

______________________________

______________________________

______________________________

3. மாடியில் வாழ்பவராயினும் எப்படி வாழ வேண்டும்?

______________________________________________

______________________________________________

______________________________________________

4. உச்சி மலை விளக்குப் போன்று சுடர்விடும் பெருமை கொண்ட நாட்டை எப்பிடிக் கூறுவர்?

______________________________________________

______________________________________________

______________________________________________

5. கவிஞர் பசுந் தமிழ்நாட்டில் ஆறு போன்று எது பாய்ந்திட வேண்டும் என்கிறார்?

______________________________________________

______________________________________________

______________________________________________

(10 புள்ளிகள்)

5) படத்தைப் பார்க்கும்போது உமக்குத் தோன்றுவதை அறுபது சொற்களுக்குக் குறையாமல் எழுதுக!

(15 புள்ளிகள்)



6) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து, நூறு சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக!

அ) நான் கண்ட கனவு

ஆ) பனிகாலம்

இ) கலைகளைக் கற்பதன் அவசியம்
(உடல், உள நலன், மகிழ்ச்சி, பொழுதுபோக்கு, அழியாமல் பேணப்படும்)

(15 புள்ளிகள்)